| | | |
|---|---|---|
| O.S No. | : | 85/2020 |
| DATE | : | 22.08.2025 |
| NAME | : | வசந்தி |
| Father's Name/ Husband's Name | : | செல்வராஜ் |

**வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

9. வழக்கறிஞர் ஆணையர் வந்து பார்வையிட்ட போது அவரிடம் தாவா சொத்தை நான் காண்பித்தேன். வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் பார்வையிடவில்லை. அதனால் என்னால் அந்த அறிக்கையின் உண்மை தன்மையை பற்றி சொல்ல இயலாது என்று சொன்னால் சரிதான்.

10. பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்க்கவில்லை. அதனால் எனக்கு அவர் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் உண்மையை பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தில் எனது நாத்தனார் மேகி எனது அனுமதியின் பெயரில் குடியிருக்கிறார். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது வா.சா.ஆ.1 பத்திரத்தில் உள்ள சொத்தில் ஓலை வீடு இருந்தது. தற்போது அந்த இடத்தில் புதிதாக வீடு நான் கட்டி வருகிறேன்.

11. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தை அளந்து பார்த்து தான் எழுதினோம். அந்த சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஜக்குபந்திகள் சரிதான். அதன் பின்பக்கம் ஏகாம்பரம் மனை வீடு போக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஏகாம்பரத்தின் மகன் தான் இவ்வழக்கின் பிரதிவாதி சந்தானம். ஏகாம்பரம் இறந்து சுமார் 10 வருடங்கள் மேல் இருக்கும். வா.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ள அளவு படி எனது பட்டா உள்ளது. அதனை நான் தாக்கல் செய்துள்ளேன்.

13. வா.சா.ஆ.3 பட்டாவில் வரைபடம் எதுவும் இல்லை என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.3 கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான், 1990ல் எனது மாமனார் பிரித்து கொடுத்துவிட்டார். வா.சா.ஆ.3 செல்வராஜ் மனைவி வசந்தி, முருகன் மகன் ஏகாம்பரம், சிந்தாமணி மகன் மகேந்திரன் ஆகியோர் பெயரில் உள்ளது. மகேந்திரனுக்கு சொத்து எதுவும் கிடையாது என்று சொன்னால் சரிதான். மேற்படி மகேந்திரன் என்பவரை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.4 1998ம் ஆண்டின் வரி ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சமீபத்தில் அல்லது தாவா தாக்கல் செய்யும் காலகட்டத்தில் உள்ள வரி ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இன்று கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கறிஞர் ஆணையரின் ஆட்சேபனை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு பின்புறம் உள்ள சொத்து சம்மந்தமாக விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக் கட்டளை மட்டும் கோரியுள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மகேந்திரனை தரப்பினராக காட்டாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

15. சர்வே எண். 191/32ல் தான் என் சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். எங்களது சொத்து எப்போது பிரிந்தது என்பதை காட்டுவதற்கு நானோ அல்லது பிரதிவாதியோ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நானும் பிரதிவாதியும் எழுத்து மூலமாக அல்லாமல் வாய்மூலமாக தான் பிரித்து அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தற்போது வரை பிரிபடாமல் உள்ளது. தாவா சொத்தை பிரிப்பதற்கு நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால் சரிதான்.

16. சொத்தை பிரிப்பதற்காக பரிகாரம் கோராமல் நாராசம் கேட்பதால் இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நாராசத்தின் விவரம் சரிவர குறிப்பிடப்படாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.